நீ கர்த்தருக்கு பயந்திருந்தால்

Blessed Is the One Who Fears the Lord

Album 27 Song 6 | ஆல்பம் 27 பாடல் 6





நீ கர்த்தருக்கு பயந்திருந்தால்

Sat
DATE 05 05 2007 112 சங்கீதம்

நீ கர்த்தருக்கு பயந்திருந்தால்
உன் சந்ததி பூமியில் பலத்திருக்கும்
கர்த்தரின் கட்டளைகளைக் கைக்கொண்டால்
உன் வம்சம் என்றென்றும் ஆசீர்வதிக்கப்படும்

பயப்படு பயப்படு கர்த்தருக்கே பயந்திரு
பயப்படு பயப்படு அவர் ஒருவருக்கே என்றும் பயந்திரு

நீ கர்த்தருக்கு பயந்திருந்தால்
செல்வமும் ஐசுவரியமும் உன் வீட்டிலிருக்கும்
கர்த்தரின் கட்டளைகளைக் கைக்கொண்டால்
உன்னுடைய நீதி என்றைக்கும் நிற்கும்
(பயப்படு)

நீ கர்த்தருக்கு பயந்திருந்தால்
உன் இருளிலும் வெளிச்சம் உதிக்கும்
கர்த்தரின் கட்டளைகளைக் கைக்கொண்டால்
நீ இரக்கமும் மன உருக்கமும் உள்ளவனாவாய்
(பயப்படு)

நீ கர்த்தருக்கு பயந்திருந்தால்
உன் அயலானுக்கு இரங்கிக் கடன்கொடுப்பாய்
கர்த்தரின் கட்டளைகளைக் கைக்கொண்டால்
நீ நியாயமானபடி நடந்து பாக்கியவானாவாய்
(பயப்படு)

நீ கர்த்தருக்கு பயந்திருந்தால்
என்றென்றைக்கும் அசைக்கப்படாதிருப்பாய்
கர்த்தரின் கட்டளைகளைக் கைக்கொண்டால்
நித்திய கீர்த்திபெற்று நீதிமானாவாய்
(பயப்படு)

GLORY KING OF KINGS

DATE

நீ கர்த்தருக்குப் பயந்திருந்தால்
துர்ச்செய்தியைக் கேட்டாலும் பயப்படமாட்டாய்
கர்த்தரின் கட்டளைகளைக் கைக்கொண்டால்
உன் இருதயம் கர்த்தரை நம்பி நீ திடனாவாய்
(பயப்படு)

நீ கர்த்தருக்குப் பயந்திருந்தால்
ஏழைகளுக்கு வாரியிறைப்பாய்
கர்த்தரின் கட்டளைகளைக் கைக்கொண்டால்
மகிமையாய் தேவன் உன்னை உயர்த்துவார்
(பயப்படு)

துன்மார்க்கன் உன்னைக் கண்டு மனமடிந்துபோவான்
தன்னுடைய பற்களைக் கடித்துக் கரைந்துபோவான்
துன்மார்க்கருடைய ஆசைகள் அழிந்து போய்விடும்
உன்னுடைய கொம்பையோ தேவன் உயர்த்துவார்
(பயப்படு)

HALLELUJAH

HALLELUJAH